பக்கங்கள் 6 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு
The EELANADU

மலர் 19 ஆனி 20 றஜப் 16 இதழ்: 143
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4-7-77

## 'சட்டமோ வன்முறையோ மொழியைத் திணிக்கேலாது'

### டில்லியில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

புதுடில்லி, ஜூலை, 3 'தமிழ் நாட்டில் ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என பிரதமர் எனக்கு உறுதியளித்துள்ளார்' என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இன்று புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மேலும் கூறியதாவது: 'கிராமங்களில் குடிநீர் வசதியைப் பெருக்க தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சியை மேற்கொள்ளும். மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆயிரத்துக்கு மதிகமான சிறு கைத்தொழில்கள் ஏற்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கும், நெசவா

(6-ம் பக்கம் பார்க்க)

### இலங்கை ஆசிரியர் சங்க மாநாடு:

# சுயநிர்ணயப் பிரேரணை

# ஒத்திவைப்பு!

## மத்திய குழுவின் முடிவுக்கு சமர்ப்பிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று முடிவடைந்த இலங்கைஆசிரியர் சங்க மாநாட்டில் யாழ் கிளை சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரேரணை சங்கத்தின் மத்திய நிறைவேற்றுக் குழுவின் முடிவுக்கு விடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

'தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை வழங்குவதன் மூலம் இருஇனங்களுக்கிடையில் அமைதியையும், ஒற்றுமையையும், பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் உருவாக்க முடியும்' என்றுகோரும் தீர்மானமொன்று இலங்கை ஆசிரியர்சங்க மாநாட்டில், யாழ்ப்பாணம் கிளைசார்பில் திரு. என். எஸ். நடராசாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை சங்க மத்திய நிறைவேற்றுக் குழுவின் முடிவிற்கு விடுவதென பின்னர் முடிவுசெய்யப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. எஸ். என். பெர்ணாண்டோ தலைமையில் இம் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற்றது.

நுவரெலியா கிளைசார்பில் திரு. ஏ. எம். சான்டிஸ் சமர்ப்பித்த கீழ்க்காணும் பிரேரணைகளையும் இலங்கை ஆசிரியர் சங்க மத்திய நிறைவேற்றுக் குழுவின் முடிவிற்கு விடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

■ 'பெரும் தேசியவாதத்தையும், குறுகிய தேசியவாதத்தையும் எதிர்க்கின்றோம்

■ ஒருஇனத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும் அதற்காகப் போராடும் உரிமையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதென்று தீர்மானிக்கிறது.

■ 'மேற்கூறியவற்றை நடைமுறைப்படுத்த இலங்கை ஆசிரியர்சங்கம் ஒரு தனிக்குழுவை தெரிவுசெய்யவேண்டும்.

■ 'சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும்போது ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராகவும், போராட அதற்குமுழு

(6-ம் பக்கம் பார்க்க)

## "கூட்டணியினர் தமிழரை ஏமாற்றப்பார்க்கிறார்களா?"

### பொன்னம்பலம் கேட்கிறார்

யாழ்ப்பாணம், திங்கள் 'சிங்கள ஏகாதிபத்தியம் தமிழர்களை நசுக்குகின்றது. ஒப்பந்தங்கள் செய்து அலுத்துவிட்டோம், இனியுள்ள ஒரே வழி தமிழீழம் காண்பதே என்று சொல்லுகின்ற தமிழர் விடுதலைக்கூட்டணியில் உயிரோடுள்ள ஒரேயொரு ஆயுட்காலத் தலைவர் திரு. தொண்டமான், மஸ்கெலியா நுவரெலியாத் தொகுதியில் போட்டியிடுகிறார். ஆனால் அவரை 1977ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிரேரித்தவர். ஒரு சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி திரு. நிசங்க முதியான்சலாகே சிறிசேன. இது என்ன? தமிழர் கூட்டணி தமிழ்மக்களை ஏமாற்றவா பார்க்கின்றது?'

இவ்வாறு யாழ்ப்பாணம் புதுப்பள்ளிவாசல் சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வாலிபமுன்னணித் தலைவரும் யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டார்.

இக்கூட்டத்திற்கு ஜனாப் சி. எம். எம். உமர் தலைமை வகித்தார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

'இன்று கூட்டணி மேடைகளில் பலர் வட்டுக்கோட்டை வேட்பாளர் திரு. திருநாவுக்கரசு கூட்டணிக்காகச் சேவை புரிந்தவர். குமார் எதுவுமே செய்யாதவர். அதனால் அவருக்குத் தொகுதி கொடுக்கவில்லை என்று கூறுகிறார்கள். இதை ஏன் அவர்கள் எனக்கு நியமனம் தருவதாகச் சொல்லிய காலங்களில் சொல்லவில்லை. 45 நிமிடங்கள் கூட்டணி வேட்பாளர் நியமனக் குழு எனக்கு நேர்முகப்பரீட்சை வைத்தது. அந் 45 நிமிடத்திற்குள் எதுவுமே பேசாத திரு. மு. சிவசிதம்பரம் அப்போது என்னைப் பார்த்துக் 'கோமாளி' என்று சொன்னார். எந்தக் கட்டத்திலும் நியமனக்குழுவில் திரு. திருநாவுக்கரசுவின் பெயர் குறிப்பிடப்படவில்லை. எனது நேர்முகப் பரீட்சையின்பின்பு இரவு ஏழரைமணி தொடக்கம் 12 மணிவரைக்கும் திரு. சிவசிதம்பரத்தோடு கதைத்தது தான் அவருடைய சேவையாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். அதனால்தான் அவ

[6-ம் பக்கம் பார்க்க]

## "நமது நிலையை மாற்றி அமைப்போம்
—யோ. துரைசுவாமி

யாழ்ப்பாணம், திங். 'எமது இனம் ஒரு புராதன இனம். ஆயினும் இன்று உரிமைகள் அனைத்தும் இழந்தவர்களாகவும், அரசியல் பொருளாதாரத்துறைகளில் பின்தங்கியும் வாழ்கின்றோம். இந் நிலையை மாற்றி புகழ் பூக்கும் நிலைக்கு கொண்டு வருவதற்கே தமிழ் மக்கள் இயக்கம் நிறுவப்பட்டது.'

இவ்வாறு வேலணை முதலாம் வட்டாரத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழ் மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்துறைத் தொகுதி வேட்பாளருமாகிய திரு. யோகேந்திரா துரைசுவாமி கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

இக்கருத்தரங்கிற்கு என். சிவானந்தன் தலைமை தாங்கினார்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில், 'தற்போதுள்ள நிலைமையை மாற்றுவோம் என்று வெறும் சுலோகமாகப் பாடாமல் அதைச் செயல்படுத்தும் வழிகளையும் நாம் வகுத்துள்ளோம். குறுகிய காலத் திட்டங்கள், நீண்ட காலத் திட்டங்கள் என நாம் வகுத்துள்ளோம். குறுகிய காலத் திட்டங்களின் மூலம் தமிழினத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்' என்று கூறினார். (கு)

## இடிஅமின் தரிசனம்!

லண்டன், ஜூலை 3 உகண்டா அதிபர் பீல்ட் மார்ஷல் இடிஅமின், காபொனில்நடைபெற்று வரும் ஒரு மாநாட்டில் நேற்று திடீர்த் தரிசனமளித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

காபொனில் ஆபிரிக்க ஒருமைப்பாடு உச்சி மகாநாடு இப்பொழுது நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டில் கடைசிவரை கலந்து கொள்ள மாட்டேன் என்று முன்னர் அறிவித்திருந்த அதிபர் இடிஅமின் நேற்று திடீரென 'மாநாட்டு மண்டபத்தில் காட்சியளித்ததும் பெரும் வியப்பும் பரபரப்பும் ஏற்பட்டது. அவர் இம் மாநாட்டில் கலந்து கொண்டதை உறுதிப்படுத்தும் நோக்கமாக உடனடியாக டெலிவிஷன்களும் வானொலிகளும் மின்னல் வேகத்தில் செயற்பட்டன. இதன் பின்னர் ஆ. ஒ. ஸ்தாபன மாநாடும் சில நிமிடநேர பரபரப்பை தொடர்ந்து சுமுகமாக நடைபெறத் தொடங்கிற்று.

## இன்று தமிழ்நாடு சட்டசபை கூடுகிறது

சென்னை, ஜூலை 4 தமிழ்நாடு சட்டசபை இன்று கூடும்போது உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர்.

சபாநாயகர் தெரிவும் இடம் பெறும். [உ]

# பாக். வெள்ளம்: 221 பேர் பலி!
# 20,000 பேர் வீடிழந்தனர்!

கராச்சி, ஜூலை 3 **பாகிஸ்தானில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக, இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். இருபதினாயிரம் பேர் வீடிழந்துள்ளனர்.**

கடந்த 40 ஆண்டுகளுக்குப் பின்னர் பெய்த பருவமழை காரணமாக ஏற்பட்ட இந்த வெள்ளத்தினால் கரையோரப் பகுதிகளிலுள்ள வீடுகள் முற்றாக அடித்துச் செல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்பு வேலைகளில் துரிதமாக ஈடுபட்டு வரும் கடற்படையினரும் இராணுவத்தினரும் இன்று காலை வரை 221 சடலங்களைக் கண்டுபிடித்தனர். மேற்கொண்டு பலர் மாண்டிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்த வெள்ளத்தினால் இருபதினாயிரத்துக்கும் அதிகமானவர்கள் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக பல நதிகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

**மணிவாக்கு**

அகந்தையை இல்லாமற் செய்தால் மாத்திரம் பயம் நீங்கும்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
THE EELANAADU

# தேசியமொழியும் ஆசிரியரும்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்று முடிவடைந்திருக்கிறது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இன, மதபேதமின்றி இந்த மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பியிருக்கின்றனர். பல தீர்மானங்களையும் இந்த மாநாடு நிறைவேற்றியிருக்கிறது.

பொதுத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் இந்த மாநாடு நடைபெற்றதால் அரசியல் சம்பந்தப்பட்ட பல பிரேரணைகளும் இந்த மாநாட்டில் கொண்டுவரப்பட்டன.

ஆனாலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கோ எந்தவொரு தனி நபரின் வெற்றிக்கோ ஸ்தாபனரீதியாக ஆதரவளிப்பதில்லையென்ற தீர்மானம் மூன்றிலிரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நிறைவேறியிருக்கிறது.

இந்த நாட்டின் வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் பெரும் சக்தி வாய்ந்தவர்கள் ஆசிரியர்கள். இவர்கள் அனைவரும் ஒரே சங்கத்தில் அங்கம் வகிக்காமல் பல்வேறு சங்கங்களில் அங்கம்வகிப்பது அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பாதகமாக இருப்பதென்பது உண்மையே. இதே சமயம் ஆசிரிய சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு சம்மேளனத்தின் கீழ் கொண்டுவருவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி ஓரளவுக்கு வெற்றி பெற்றிருப்பதும் உண்மையே.

ஆனாலும் ஆசிரிய நியமனங்களும் கட்சிரீதியாக அரசியல் அடிப்படையில் நிகழ்ந்துவந்துள்ளதாலும் இதே அடிப்படையில் இடமாற்றங்களும் சமீப காலம்வரை இடம்பெற்று வந்தாலும் ஆசிரியர்கள் அனைவரும் ஒரே ஸ்தாபனத்தில் ஒன்றுபடமுடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

இது போன்ற காரணங்களால் எந்தக் கட்சியையோ தனிப்பட்ட வேட்பாளரையோ தேர்தலில் ஆதரிக்க வேண்டுமெனத் தீர்மானித்தால் சங்கத்துக்கே பங்கம் ஏற்படுமென்பதை உணர்ந்து கொண்டதால்தான் எக்கட்சிக்கும் எந்தத் தனிப்பட்ட வேட்பாளருக்கும் ஸ்தாபனரீதியாக ஆதரவளிப்பதில்லையென்று இலங்கை ஆசிரியர்சங்கம் விவேகமான தீர்மானத்தை எடுத்திருக்க வேண்டும்.

இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்ட முறையில் எந்தக் கட்சியையோ, தனிப்பட்ட வேட்பாளர் எவரையோ ஆதரிப்பதில் ஆட்சேபமிருக்க முடியாது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தில் பெரும்பான்மையானவர்கள் சிங்கள ஆசிரியர்களே.

ஆனாலும் யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த ஆண்டு மாநாட்டில் தமிழ் மொழியையும் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்க வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருப்பது நாட்டின் எதிர்காலம் பற்றி நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் கலந்துகொள்வதற்கென வந்திருந்தும் தமிழ் மொழியையும் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்க வேண்டுமெனக்கோரும் தீர்மானத்துக்கு ஆதரவாக நூற்றிஎண்பத்திரண்டு வாக்குகளும் எதிராகப் பன்னிரெண்டு வாக்குகளும் பெற்று நிறைவேறியது மகிழ்ச்சியளிக்கக் கூடிய விஷயமல்ல; இலங்கை ஆசிரியர் சங்கம் பெருமை கொள்ளக்கூடிய சங்கதியும் அல்ல!

என்றாலும் இந்த மாநாட்டின் மூலம் தென்னிலங்கையிலிருந்துவந்த சிங்கள இளம் ஆசிரியர்கள் சிலராவது வடஇலங்கை மக்களின் விருந்தோம்பலையும் அவர்களின் குணநலன்களையும் நேரில் அறிந்துசெல்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக இலங்கை ஆசிரியர் சங்கத்தைப் பாராட்ட வேண்டும்.

'தென்னிலங்கையில் மக்கள் நினைத்துக்கொண்டிருப்பதுபோல் வடபகுதியில்லை. நாம் இங்கு நல்லமுறையில் நடத்தப்பட்டோம்' என்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சிங்கள இளைஞர்சிலர் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு நேரில்வந்து தெரிவித்தசெய்தியை நாம் நேற்றைய பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம்.

உள்ளதை உள்ளவாறு பாராட்டும் அந்த இளைஞர்களின்பண்பை நாம்பாராட்டுகிறோம். இதே சமயம் இந்த இளைஞர்கள் மட்டுமல்ல இங்கு வந்துசெல்லும் சிங்களமக்களும் இங்கு நிரந்தரமாக வாழ்பவர்களும் இப்பகுதி மக்களின் நல்ல பண்புகளைத்தென்னிலங்கை மக்களுக்கும் எடுத்துக்கூறி உணர்த்தவேண்டும்; இதேபோன்று தென்னிலங்கையில்வாழும் தமிழ்மக்களும் அங்குள்ள சிங்கள மக்களின் நல்ல பண்புகளையும் குணநலனையும் இப்பகுதி மக்களுக்குத் தெளிவாக்கவேண்டும்.

இதற்கு பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள் பெருமளவில் உதவியும் ஊக்கமும் அளிப்பது அவசியமாகும்.

## வவுனியாவில் இருமுனைப்போட்டி

ஓமந்தை, ஞாயிறு

வவுனியாத் தொகுதியில் அரசியல் பிரசாரம் தீவிரமடைந்துள்ளது. கூட்டணி, யூ. என். பி. ஆகிய இரு கட்சிகளின் பிரசாரத்துக்காக இளைஞர்களும் யுவதிகளும் கிராமம் கிராமமாகச் சென்று தங்கள் தங்கள் கட்சிகளுக்கு ஆதரவு தேடுவதில் முனைந்துள்ளார்கள். இத் தொகுதியில் மூவர் போட்டியிடுகின்றனர் ஆயினும் முக்கியமாக இருமுனைப்போட்டியே பலம் பெற்றுள்ளது. [அ]

## எம். பி. யாவது எப்படி?

# வாக்கெடுப்புத் தேதியை நிர்ணயிப்பவர் யார்?

**சட்டமும் சமுதாயமும்**

எந்தத் தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் என்ற விடயத்தை ஆணையாளர் கசெற்றில் அறிவிப்பார் என்று மேலே கண்டோம்: ஆனல் இந்த வாக்கெடுப்புத் தேதியை உண்மையில் நிர்ணயிப்பவர் யார்? இதற்கு விளக்கம் தரத் தேவையில்லை. ஏலவே தரப்பட்டிருக்கும் பிரகடனத்தை அதாவது தேசிய அரசுப் பேரவையைக் கலைக்கும் சனாதிபதியின் பிரகடனத்தைப் (18 5-77) பார்த்தால் இது விளங்கும். பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கும், நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கும், தேர்தலை நடாத்துவதற்கும், தேசிய அரசுப் பேரவையைக் கூடுமாறு அழைப்பதற்குமஆன உரிமை சனாதிபதிக்கு உண்டு என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 21, 41(6) ஆகிய பிரிவுகளும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் அரசுப் பேரவைச் கட்டளையின் 27 ம் பிரிவும் கூறுகின்றன. இவ்வாறிருக்க, தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையாளர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அறிவித்ததை, தேர்தல் ஆணையாளர் பொதுமக்களின் நன்மைக்காக கசற்றில் அறிவிப்பது மூலமும் செய்தித்தாள் அறிவித்தல் மூலமும் பகிரங்கப்படுத்துகின்றார் என்று கொள்வதே முறை.

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்ட நாளிலிருந்து எவ்வளவு காலத்துள் தேர்தல் நடைபெறுதல் நடைபெறுதல் வேண்டும் என்று வாசகர்கள் வினவக் கூடும். இதற்கான மறுமொழி தேர்தல்கள் சட்டத்தின் 27ம் பிரிவிலேயும் 35ம் பிரிவிலேயும் உள்ளது. தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினறு நாட்களுக்கு முற்படாத ஒரு தேதியாகவும் முப்பது நாட்களுக்குப் பிற்படாத ஒரு தேதியாகவும் உள்ள ஒரு தேதியில் வேட்பாளர்கள் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் என்று தேர்தல் சட்டம் கூறுகின்றது.

நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து எவ்வளவு நாட்களுக்குள் தேர்தல் நடைபெறுதல் வேண்டும் என்ற தேவைப்பாடு அல்லது கட்டுப்பாடு உண்டா என்ற நீங்கள் கேட்கக்கூடும். 35 ஆம் பிரிவின்(3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இதற்கு விடை உள்ளது. நியமனத் தேதியிலிருந்து மூன்று வாரங்கள் கழிந்த பின்னர் ஆனல் எட்டு வாரங்கள் கழியுமுன்னர் வாக்கெடுப்பு நடைபெறுதல் வேண்டும். இந்தவிதி பாராளுமன்றத்தின் பொதுத்தேர்தலுக்கு மட்டுமே பொருந்தும் சம்பந்தப் பட்ட தேர்தல் ஓர் இடைத்தேர்தலாயின் அந்தத் தேர்தலுக்கான நியமனத் திகதியிலிருந்து மூன்று வாரங்கள் கழிந்த பின்னர் ஆனல் ஐந்து வாரங்கள் கழிய முன்னர் நடைபெறுதல் வேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல்கள் ஒரேநாளில்தான் நடைபெறவேண்டுமா? இப்போது (1977 யூன் 14) இந்தியாவில் நடந்துகொண்டிருப்பதுபோல வெவ்வேறு திகதிகளில் நடைபெறமுடியாதா? யார் சொன்னர் முடியாதென்று? வெவ்வேறு நாட்களில் நடைபெற முடியும். 1956-ம் ஆண்டு வரை இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்கள் அவ்வாறுதான் நடைபெற்றன.

### வாக்கெடுப்பு நிலையத்தை மாற்றலாமா? [பிரிவு 35 (3அ)]

மாற்றலாம் என்கிறது சட்டம் வாக்கெடுப்புக்கென கசற் அறிவித்தல் (Gaxette Notification) செய்துத்தாளறிவித்தல் ஆகியனமூலம் நிர்ணயிக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தை ஏதேனும் நெருக்கடி நிலைமை அல்லது அவசரகால நிலைமை காரணமாக வேறோரிடத்துக்கு மாற்றவேண்டியுள்ள விடத்து ஆணையாளர் தமது தற்றுணிபின்படி அதனை மாற்றலாம்.

### தேர்தற் திகதியைக் கடைசி நேரத்தில் பின் போடலாமா? [பிரிவு 35 (3பி)]

பின்போடமுடியும். தேர்தலுக்கென்று வேட்பாளர்களைப் பெயர்குறித்து நியமிக்கும் போது எழுகின்ற ஏதேனும்கருமம் காரணமாக அல்லதுஏதேனும்நெருக்கடி நிலைமை காரணமாக கசற்றறிவித்தல் மூலம் தேர்தல் ஆணையாளர் நியமித்த திகதியன்று தேர்தலுக்கான வாக்கெடுப்பை நடத்த முடியாதிருக்கிறவிடத்து வாக்கெடுப்புக்கென வேறொரு திகதியை ஆணையாளர் நியமிக்கலாம். இது கசற்றுக்கட்டளை மூலமே நியமிக்கப்படலாம். இந்தத் திகதி அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குப்பிறகு பிந்திய ஒரு திகதியாகவே இருக்கமுடியும்.

**ஒருறுப்பினர்த் தொகுதியில்போட்டியிடவென சமர்க்பிக்கப்பட்ட நியமனப் பத்திரங்கள் அத்தனையுமே நிராகரிக்கப்படின் என்ன நடக்கும்?**

இப்படியான ஒரு சூழ்நிலையை இலங்கையின் தேர்தல்சட்டம்எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை. எனவே தான் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் இது தொடர்பான ஏற்பாடெதுவும் காணப்படவில்லை. ஆனல் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தேர்தல் நடைபெறும் என்று ஆணையாளர் வெளியிட்ட அறிவித்தல் இரத்துச் செய்யப்படும். மீளவும் நியமனப்பத்திரம் சமர்ப்பிப்பதற்கான புதிய திகதியும் அறிவிக்கப்படும்.

**மூவுறுப்பினர்த் தொகுதியில் போட்டியிடுவதற்கு ஒரேஒரு வேட்பாளரின் நியமனப் பத்திரம் மட்டும் சமர்ப்பிக்கப்படின் நிலைமை என்ன?**

அல்லது

**மூவுறுப்பினர்த் தொகுதியில் போட்டியிடவெனச் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களில் ஒரு நியமனப் பத்திரம் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏனையவை நிராகரிக்கப்படின் நிலைமைஎன்ன?**

இந்த வினவுக்கான மறுமொழியையும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில்காண முடியவில்லை. ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனப் பத்திரத்திற்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் வெளிப்படுத்துவார் என்றும் ஏனைய இரண்டு ஆசனங்களையும் நிரப்புவதற்கெனப் புதிய நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய திகதியைஆணையாளர் அறிவிப்பார் என்றும் கூறுவது பிழையாகாது.

— செ.சிறீக்கந்தராசா —
(சட்டத்தரணி)

## லட்சரூபா நஷ்டஈடு

கொழும்பு, ஞாயிறு

பஸ் விபத்தொன்றில் சிக்கிய பாடசாலை ஆசிரியைக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

இவ்வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் திரு கே. சி. ஈ. டீ. அல்விஸ் முன்னியில் நடைபெற்றது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த கோவின்னவை சேர்ந்த திருமதி கே. இந்திராணி ஜெயவர்த்தன என்ற ஆசிரியை இ.போ.ச. விடமும் பஸ் சாரதி டபிள்யூ ரணவாக்கேயிடமும் கவலையீனமாக பஸ்ஸை செலுத்தி விபத்து ஏற்படுத்தியதற்காக 1 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரியிருந்தார்.

# "இயக்கத்துக்காக எதையும் இழப்பேன்"

—யோகேஸ்

யாழ்ப்பாணம், திங்கள்

"எனது இயக்கத்திற்காக எதையும் இழக்கத் தயாராக இருக்கின்ற நான் இம்முறை தேர்தலில் தோல்வியடைந்தாலும்கூட என் இயக்கத்தின் இலட்சியத்திற்காக கொண்ட கொள்கைக்காகத் தொடர்ந்தும் போராடிவருவேன்."

இவ்வாறு நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகரையும், நல்லூர்த் தொகுதி அபேட்சகரையும் ஆதரித்து வைமன் றோட்டில் திரு. ஸ்ரீரஞ்சன் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

இன்றைய தேர்தல் ஒரு சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த தேர்தல். தமிழினம் இந்த நாட்டில் சுதந்திரம் கொண்ட இனமாக வாழப்போகிறதா அல்லது அடிமை இனமாகத் தான்வாழ ஆசைப்படுகின்றதா என்பதைத் தீர்மானிக்கின்ற தேர்தலாகவே இது அமையும். இந்தத் தேர்தலை நாம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே கருதுகின்றோம். நாம் கொண்ட கொள்கைக்கு இலட்சியத்திற்கு தமிழினம ஆதரவு தருகிறது என்றும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கத் தயாராக இருக்கிறதென்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட இது ஒரு தக்க சந்

(6-ம் பக்கம் பாக்க)

# அயன்ஸ்மித் மீது குற்றச்சாட்டுகள்!

**சாலிஸ்பரி, ஜூலை 3 ரொடீஷிய பிரதமர் அயன்ஸ்மித்துக்கு, அவரது ஆட்சிக்குள்ளேயே எதிர்ப்புகள் உருவாகியுள்ளது!**

பிரதமர் அயன்ஸ்மித்தை எதிர்த்த பன்னிரண்டு ஆதரவாளர்கள் கட்சிலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஆட்சிக்குள்ளேயே சலசலப்புகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

இதன் எதிரொலியாக, ஆளும் முன்னணிக் கட்சித் தலைவர் நேற்று ராஜினமாச் செய்துவிட்டார்!

அவர் நேற்று விடுத்த அறிக்கையில் ரொடீஷியாவை ஆள அயன்ஸ்மித் தகுதியற்றவர் என்று தெரிவித்துள்ளார்.

''ரொடீஷியாவின் எதிர்காலம்பற்றி அயன்ஸ்மித் திட்டமெதுவும் வகுக்கவில்லை. மோசமான கொள்கைகளை அவர் கையாண்டுவருகின்றார். அவரது திறமையின்மையினால் ரொடீஷியா இப்பொழுது தடுமாறுகிறது'' என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மதுவிலக்குக் கொள்கையை வற்புறுத்த மாட்டோம்!

**—பாண்டிச்சேரி முதல்வர்**

காரைக்கால், ஜூலை 3 புதுச்சேரியில் முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட திரு எஸ். இராமசாமி புதுச்சேரி முன்னேற்றத்துக்காக இருபத்தைந்து அம்சத்திட்டமொன்றை வெளியிட்டுள்ளார்

புதுச்சேரியில் அ. இ. அ. தி. மு. கழகம் பதவியேற்றிருப்பதும். திரு. எஸ். இராமசாமி முதல்வராக வந்திருப்பதும் வாசகர்கள் தெரிந்ததே.

பதவியேற்றதைத் தொடர்ந்து பாண்டிச்சேரியின் முன்னேற்றத்துக்காக 25 அம்சத் திட்டத்தை வெளியிட்ட அவர், மதுவிலக்குக்கொள்கையை வற்புறுத்தமாட்டோம் என்று அறிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை 'பி-2' அந்தஸ்துக்கு உயர்த்த தமது அரசு மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று தெரிவித்த முதலமைச்சர் எஸ். இராமசாமி; புதிய அரசு எடுக்கப் போகும் திட்டங்கள் பற்றியும் விவரித்தார்.

'பாண்டிச்சேரியில் அனல் மின்சார நிலையமொன்றை அமைக்கநடவடிக்கைகள் எடுக்கப்படும். விமான நிலையம், ஆழ்கடல் மீன்பிடி நிலையம் ஆகியவற்றை இங்கு அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்று தெரிவித்த முதல்வர், சட்ட சபையின் முதலாவது கூட்டம் எப்பொழுதுநடைபெறும் என்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று கூறினர்.

# சஞ்சய் மனைவியின் பாஸ்போர்ட்டும் பறிமுதலானது!

**புதுடில்லி, ஜூலை 3 திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தியின் மனைவி திருமதி மேனகா காந்தியின் பாஸ்போர்ட் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.**

ஏற்கனவே திரு. சஞ்சய் காந்தி, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. பன்சிலால் உட்பட பலரின் பாஸ்போர்ட்டுக்களை அரச பறிமுதல் செய்துள்ளது தெரிந்ததே.

### மாருதி பற்றி 8-ல் விசாரணை

மாருதி ஊழல் விசாரணை சம்பந்தமான கமிஷன் இம்மாதம் 8-ந் திகதி கூடுகின்றது.

புதுடில்லி அறிவியற் மாளிகையில் அலகாபாத் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நடுவர் திரு. எஸ் மாதூர் தலைமையில் விசாரணை ஆரம்பமாகும். மாருதி ஊழல் சம்பந்தமாக திரு. சஞ்சய் காந்தியின் நடவடிக்கைகளை நன்கறிந்தவர்கள் இதுபற்றித் தங்கள் குற்றச்சாட்டுக்களை விசாரணைக் கமிஷன் முன் கூறமுடியுமென கமிஷன் தலைவர் எஸ். மாதூர் தெரிவித்துள்ளார்.

### காமராஜருக்கு நினைவுச் சின்னம்

அமரர் காமராஜர் வாழ்ந்த இல்லத்தை நினைவுச்சின்னமாக பாதுகாப்பதற்கு தமிழகஅரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

காமராஜர் வாழ்ந்த இல்லத்தை விலைகொடுத்து அரசு வாங்கியுள்ளது. இந்தஇல்லம் தியாகராஜநகரில் திருமலைப் பள்ளி சாலையில் அமைத்துள்ளது.

### தேர்தல் வழக்கு

ராசிபுரம் லோகசபா தேர்தலில் வெற்றி பெற்ற இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திரு. பி. தேவராஜன் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாது என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர் மதத்தால் கிறிஸ்தவராக இருந்தும், மக்களைத் தன் பக்கம் திருப்பத் தாம் இந்துவெனக்கூறி ஏமாற்றி தேர்தலில் வெற்றிபெற்றுளாரென தேர்தல் வழக்கில் கூறப்பட்டுள்ளது.

இத் தொகுதியில் பழைய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமதி ஜோதி வெங்கடாசலம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

### மரண தண்டனையை நீக்குக

மேற்கு வங்காளத்தில் இரண்டு நக்ஸலைட் பெண்கள் மீது விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையைக் குறைக்குமாறு இந்திய உபராஷ்டிரபதி ஜட்டிக்குப் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பெண்கள்மீது மரண தண்டனை விதிக்கப்பட்டு இம்மாதம் 18-ம் திகதி தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தண்டனை குறைக்கப்பட வேண்டுமென்று சில ஜனதா கட்சி அங்கத்தவர்களும் குரல் எழுப்பியுள்ளனர்.

### 44-வது ஷரத்து

அரசியல் சாஸனத்தில் திருத்தப்பட்ட 44-வது ஷரத்தை வாபஸ் பெறவேண்டும் என்று நான்குகாங்கிரஸ் எம்.பி.க்கள் பிரதமரைக் கேட்டுள்ளனர்.

நீதி நிர்வாகத்தில் அரசுதலையிட புதிய திருத்தம் வகை செய்திருக்கிறது. இத் திருத்தத்தை முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி செய்திநக்கிருர்.

# லொறி விபத்து! மூவர் பலி!

மதுரை, ஜூலை 3 அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக பதவியேற்பு வைபவத்தை பார்த்துவிட்டு லொறியில் திரும்பியவர்கள் விபத்தொன்றில் சிக்கியதில், மூவர் பலியானுர்கள்.

அ. இ. அ. தி. மு. கழக மந்திரி சபையின் பதவியேற்பு வைபவம் கடந்த வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்றது. இந்த சிறப்பு நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக நாட்டின் நாலா பகுதிகளிலிருந்தும் பெருந்திரளான மக்கள் சென்னையை நோக்கிப் படையெடுத்திருந்தனர். ரயில் பஸ் தவிர பலநூற்றுகணக்கான லொறிகளிலும், வான்களிலும், கார்களிலும் இவர்கள் சென்னைக்கு சென்றிருந்தனர். மதுரைக்கு சற்றுத் தூரத்திலுள்ளஒரு கிராமத்திலிருந்து ஒரு லொறியில் சென்னை சென்றவர்கள்,' பதவியேற்ப வைபவத்தைப் பார்த்துவிட்டு நேற்று ஊர்திரும்பிக் கொண்டிருக்கையில், மதுரையிலிருந்து சுமார் 15 மைல் தூரத்திலுள்ள நரசிம்மன்பட்டியில் லொறிபாதையை விட்டு விலகி ஒரு பள்ளத்தில் பாய்ந்தது அந்தஇடத்திலேயே இருவர் மாண்டனர். ஒருவர் ஆஸ்பத்திரியில் காலமானுர். பதினெருபேர் காயமடைந்தனர்.

# அரசியல் சாஸனத்தைத்திருத்துமாறு தி. மு கழகம் கோரிக்கை

சென்னை, ஜூலை 3 'ஹிந்திமொழி பேசாதவர்கள் விரும்பும்வரை ஆங்கில மொழி இந்தியாவில் அரசகருமமொழியாக இருக்கக்கூடியதாக இந்திய அரசியல் சாஸனத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும்.'

இவ்வாறு மத்திய அரசைக்கோரும் தீர்மானமொன்று தி. மு. கவின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் திரு. மு. கருணநிதி உரையாற்றினர்.

அ. இ. அ. தி. மு. க. அரசு தி. மு. கவுக்கு வழங்கினல் அதை தி. மு. க. ஏற்றுக் துணைச்சபாநாயகர் பதவியை கொள்ளுமா? என்று கேட்டதற்கு அப்பதவி வழங்கப்பட்ட பின்னரே அதுபற்றித் தீர்மானிக்கப்படும் என்று திரு. மு. கருணநிதி கூறினர்.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் அரசு வழங்கும் வசதிகளை தி. மு. க. நிராகரிக்காது என்றும் கலைஞர் கருணநிதி கூறினர். (இ)

# ஜம்மு-காஷ்மீர் தேர்தல் முடிந்தது

ஸ்ரீநகர், ஜூலை 3 ஜம்மு-காஷ்மீர் சட்டசபைத்தேர்தலின் இரண்டாவதுகட்ட வாக்களிப்பு இன்று நடைபெற்றது

சட்டசபைத் தேர்தலின் முதல் கட்ட வாக்களிப்பு கடந்த 30-ம் திகதி நடைபெற்றது.

இன்று காஷ்மீர் பள்ளத்தாக்கிலும், லடாக்கிலும் உள்ள 44 சட்டசபைத் தொகுதிகளில் வாக்கெடுப்பு நடைபெற்றது. லடாக்கிலிருந்து ஒருவர் லோகசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர்.

இன்றைய இரண்டாவது கட்ட வாக்களிப்புடன் ஜம்மு-காஷ்மீர் சட்டசபைத் தேர்தல் முடிவுபெறுகிறது. தேர்தல் முடிவுகள் இரண்டு தினங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சட்டசபைத் தொகுதிகளிலும் மொத்தம் 174 பேர் போட்டியிட்டனர்.

# ''முஸ்லிம்கள் நசுக்கப்படுவர் என்ற பிரசாரம் ஒரு புரளி''

**—சந்திரகாசன்**

யாழ்ப்பாணம், திங்கள் ''தமிழ் ஈழம் மலருமாளுல் முஸ்லிம் மக்கள் தமிழர்களால் நசுக்கப்படுவார்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. இது ஒரு புரளி. இந்த நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் நண்பர்களுக்காகக் குரல் கொடுப்பது தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றுதான். சுவிட்ச்சர்லாந்தில் அமைந்திருக்கும் ஆட்சி முறைபோல் மத, இன, மொழி பாகுபாடற்ற சமதர்ம தமிழ் ஈழக் குடியரசை நிறுவ நாம் உறுதி பூண்டுள்ளோம் ''

இவ்வாறு யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு. செ. சந்திரகாசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு ஐனுப் முத்துராஜா தலைமைவகித்தார். திரு. செ. சந்திரகாசன் பேசுகையில் மேலும் கூறியதாவது:

''எமது இனம் வளர்ச்சி அடையவேண்டுமானுல் , விடுதலையுணர்வுள்ளவர்களே எமக்கு வேண்டும். இன விடுதலைக்காக, எவன் தன்னை அர்ப்பணிக்கச் சித்தமாக இருக்கின்ருனே. அவன்தான் வேட்பாளஞக நிற்கத் தகுதியுடையவன். தமிழினம் விடுதலை பெற எண்ணிப் போராடும் இந்நேரத்தில் மக்களே அரசியலை வழிநடத்தி வாக்களிப்பார்கள்'' என்ருர்.

சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் பேசுகையில், ''இன்று தமிழினத்தின் வரலாற்றில் கால் நூற்ருண்டுகாலம் இன விடுதலைக்கு என்னலான பங்கைச் செலுத்தியிருக்கிறேன். ஆனுல் எனக்கு நியமனக்குழு இடம்தரவில்லையென நான் சுயேச்சையாகப் போட்டியிடவில்லை. என்னை ஒரு காலம் நியமிக்கும் பாது போட்டியிடலாம். இன்று இன ஒற்றுமைதான் அவசியமென இயங்கிவருகிறேன்'' என்ருர்.

யாழ்ப்பாண கூட்டணி வேட்பாளர்திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், ''இன்று நாம் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு. ஒன்று இன விடுதலை. இரண்டாவது தமிழகம் நிறுவ என்னவகையில் போராடுவதென்று. ஓர் இனம் விடுதலை பெறவேண்டுமானுல் தமிழர், முஸ்லிம் பாகுபாட்டை மறந்து ஓரணியில் ஒரு கொடியின்கீழ் ஒற்றுமை காணவேண்டும். இந்த ஒற்றுமை இத்தேர்தலின்மூலம் ஏற்படுகின்றது நாம் இப்போது ஏற்படுத்திய உறவு தேர்தல உறவாகமட்டுமல்லாமல், தனிநாடு காணும் ஓர் தேசிய உறவாகவும் இனப் போராட்டமாகவும் மலரும். இனியும் முஸ்லிம்களையும் தமிழர்களையும் அடக்கியாள முடி

(5ம் பக்கம் பார்க்க)

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

# ஈழநாடு

## தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

## போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........ |
| 80. | வட்டுக்கோட்டை | ........ |
| 81. | காங்கேசன்துறை | ........ |
| 82. | மானிப்பாய் | ........ |
| 83 | கோப்பாய் | ........ |
| 84. | உடுப்பிட்டி | ........ |
| 85. | பருத்தித்துறை | ........ |
| 86. | சாவகச்சேரி | ........ |
| 87. | நல்லூர் | ........ |
| 88. | யாழ்ப்பாணம் | ........ |
| 89. | கிளிநொச்சி | ........ |
| 90. | மன்னார் | ........ |
| 91. | முல்லைத்தீவு | ........ |
| 92. | வவுனியா | ........ |
| 94. | திருகோணமலை | ........ |
| 95. | மூதூர் | ........ |
| 96. | கல்குடா | ........ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........ |
| | (2) | ........ |
| 98. | பட்டிருப்பு | ........ |
| 100. | சம்மாந்துறை | ........ |
| 101. | கல்முனை | ........ |
| 102. | பொத்துவில் (1) | ........ |
| | (2) | ........ |
| 103. | புத்தளம் | ........ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 88 | யாழ்ப்பாணம் | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 97 | மட்டக்களப்பு | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |

தபாற்கட்டளை/காசுக்கட்டளை இல ........ ரூபா ........ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைக ளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

## தேர்தல் வாக்குறுதிகள்

### பனையில் பனம் தொழிற்சாலை

கிளிநொச்சி, ஞாயிறு

அடுத்து ஆட்சி அமைப்பது ஐக்கிய தேசியக் கட்சியே இதில் நான் கிளிநொச்சித் தொகுதியில் வென்றாலும் அன்றித் தோற்றாலும் கண் டிப்பாக பனையில் ஒரு பனம் தொழில் சாலை நிறுவு வேன்.

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திரு. என். கனகசூரியர் கண்டாவளையில் நடைபெற்ற தேர்தல் பிரச் சாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும் போது கூறி னார்.

திரு. பரமசாமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- கிளிநொச்சி யிலும் அதை அடுத்த பகுதி களிலும் 34 லட்சம் பனை மரங்களுக்கு மேல் உண்டு. ஆனால் இப்பனைகளின் பலனை நாங்கள் சரிவர நுகரவில்லை இப்பனைகளில் இருந்து நமக்கு வேண்டிய நுகர்வுப்பொருள் கள் பல பெறும் வாய்ப்பைப் பெற பனைப்பகுதியில் ஒரு பிர மாண்டமான பனம் தொழிற் சாலையைக்கட்டி வைப்போம்.

அத்துடன் இப்பகுதிப் வைக்கோல் வகைகளைக் கொண்டு கடதாசி ஆலை ஒன்றை நிறுவுதற்கும் இப் பகுதி புல் இனங்களைக் கொண்டு பாய் இழைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் நடவடிக்கை எடுப் பேன்.

திருவாளர்கள்:- கே. தேவ ராசா, திரு. நாயகம்சிற்றம் பலம், திரு. பாலசுப்பிரமணி யம், திரு. ஆனந்தராசா ஆகி யோர் பேசினர்.

### நேரடித் தொலைபேசி

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிக்கும் கொழும் புக்கும் நேரடித் தொலைபேசி வசதிக்கான பூர்வாங்க வேலை கள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன. இம்மாத இறுதிக் குள் இவ்வேலைகள் முடிவடை யும். அத்துடன் பாரிய மின்சார வேலைகளும் நடைபெற வழி வகுக்கப்படுகின்றன.

இவ்வாறு கிளிநொச்சி சந்தை மைதானத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு. கெ. குமாரசூரியரை ஆதரி த்து நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் திரு. செ. குமாரசூரியர்கூறினார். திரு. வி. அருளப்பு தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

### மகாவலி நீர்வரும்!

கொடிகாமம், ஞாயிறு

"எங்கள் நாடு பொருளாதா ரத்துறையில் மிகவும் பிற் போக்கான நிலையில் தள்ளப் பட்டுள்ளது. நாம் மகாவலி கங்கையை வடக்கே திருப்பி வவுனிக்குளத்தில் விழச்செய்து அங்கிருந்து சுமார் 600 சிறிய குளங்களுக்கு நீர்ப்பாச்சுவதன் மூலம் பூநகரி முதலாக வட மாகாணம் முழுவதையும், நெற்களஞ்சியமாகவும், மிளா காய், வெங்காயம் போன்ற உப உணவுப் பொருட்களின் களஞ்சியங்களாகவும் மாற்ற லாம். படித்துப்பட்டம்பெற்று உத்தியோகம் இல்லாமல் இருக் கும் வாலிபர்கட்கு போதிய பொருளாதாரம் கொடுக்கும் திட்டங்களாகச் செயல்படச் செய்யவேண்டும்"

இவ்வாறு மட்டுவில் வடக்கு ஸ்ரீவேற்பிள்ளை வாசிகசாலை யின் முன்றலில் திரு. மு. சுப் பிரமணியம் தலைமையில் ஜீ. ஜீ. காங்கிரஸ் வேட்பாளர் திரு. வி. குமாரசாமியை ஆதரிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டத் தில் திரு. வீ. குமாரசாமி கூறி னார்.

மிருசுவில் படித்த பெண்கள் திட்டத்தில் உள்ளவர்கள் வரு டம் ஒன்றுக்கு தலா 20000 ரூபாவரை வருமானம் பெற முடியுமாயின் ஏன் இப்படி 10000 திட்டங்களை நாட்டிலே உண்டாக்கக்கூடாது? இப்பேற் பட்ட குறைகளை நிவர்த்தி செய்து மக்களை மக்களாகவே வைக்கவேண்டும் என்பது தான் ஜீ ஜீ. காங்கிரசின் நோக கம். திரு. மு. சுப்பிரமணியம் மற்றும் தில்லைநாதன், சந்திரன் முதலியோரும் பேசினர்கள்

## ''தமிழ் ஈழத்தில் முஸ்லிமும் தமிழனும் இணைந்து வாழலாம்''

– யோகேஸ்வரன்

யாழ்ப்பாணம், திங்கள்

''இலங்கைபூராவும் தமிழன் செறிந்துவாழ்கிறான். அவன் எந்தத் தொகுதியில் பெரும் பான்மையாக வாழ்ந்தாலும் உரிமையற்ற இனமாக வாழ் கின்றான். அவன் உரிமையுடன் வாழ்வதற்கு அவனுக்கு ஒரு நாடு அவசியம். அங்கே, தமி ழனும், முஸ்லிமும் ஒன்றிணை ந்துவாழலாம். அதற்கான விடு தலைப்போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துச் செயல்படும் இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றுதான்''

இவ்வாறு யாழ். நாவலர் வீதியில் கூட்டணி வேட்பாளர் கள் திரு. மு. சிவசிதம்பரம், திரு. வெற்றிவேலு யோகேஸ் வரன் ஆகியோரை ஆதரித்து நடைபெற்றகூட்டத்தில்யாழ். கூட்டணி வேட்பாளர் திரு. யோகேஸ்வரன் பேசுகையில் கூறினார். கூட்டத்திற்கு திரு. பொ. அம்பலவாணர் தலைமை வகித்தார்.

இவரைத் தொடர்ந்துபேசிய ஊர்காவற்றுறை தமிழர் விடு தலைக் கூட்டணி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில்,

'தமிழினம் இன்று அதன் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தலாக அடிமைவாழ்வி லிருந்து விடுபடுவதற்கானசர்வ ஜனவாக்கெடுப்பாக இத்தேர் தலைப் பயன்படுத்தவேண்டும் என்றார்.

திரு. மு. சிவசிதம்பரம் பேசி யதையடுத்து, திரு. வண்ணை ஆனந்தன் பேசுகையில், தமிழி னத்தின் வெற்றி நிர்ணயிக்கப் பட்டதொன்றானாலும் இவ் வெற்றி உலகின் கண்களுக்குத் தெரியக்கூடிய வெற்றியாக அமையவேண்டும் என்றார்.

திருவாளர்கள் பொன். மதி முகராசா, சபா. செந்துராஜா, ஜனப் முத்துராஜா, எஸ் தியாகராசா உட்படலப் பலர் உரையாற்றினர். (கெ-அ)

## "அடிமைத்தனமா சுதந்திரமா வேண்டும்?"

### கதிரவேலுப்பிள்ளை கேட்கிறார்

விஸ்வமடு, ஞாயிறு

'இந்தநாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கள் சுதந்திரத்தை விரும்புகிறார்களா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற் காகவே இப்பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. எமது இனம், மொழி, கலை, கலாச் சாரம் பாதுகாக்கப்படவேண்டு மானால் கூட்டணியை ஆதரி யுங்கள். அடிமை இனமாக வாழவேண்டுமானால் எவருக்கா வது வாக்களியுங்கள்''.

இவ்வாறு கோப்பாய்த் தொகுதி த. வி. கூ. வேட்பா ளர் திரு. சி கதிரவேலுப்பிள்ளை புத்தூர் மேற்கு மருதடியில் திரு. சிதம்பரப்பிள்ளை தலைமை யில் நடைபெற்ற தேர்தல் பிர சாரக் கூட்டத்தில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'1948-ம் ஆண்டுக்குப் பின் சிங்கள அரசாங்கம் மலைநாட் டுத்தமிழர்களின் வாக்குரிமைக ளைத் தட்டிப் பறித்ததுடன் தமிழ்ப்பிரதிநிதிகளில் 8 பேர் பாராளுமன்றம் செல்லாத வாறு தமிழ்ப் பிரதிநிதிகள் தொகையில் குறைக்கப்பட்ட னர். இந்த முதலாவது அநி யாயத்தை நாம் முறையாக அன்று எதிர்த்துப் போராடி யிருந்தால் இன்று இந்தநிலை வந்திருக்குமா? ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனையும் கடி த்தகதைபோல, எமது பாஷை உரிமைகளையும் பறித்து எமது மதங்களுக்கு ஒருவித பாது காப்புங்கொடாது எமதுபாரம் பரிய நிலங்களையும் பறித்துக் கட்டக்கூடியவிதத்தில் 1972ம் ஆண்டு அரசியல் சாசனம் அமைத்து தனிச்சிங்களக் குடி அரசாக இந்தநாட்டைப் பிர கடனம் செய்துவிட்ட அநீதி யைத் தமிழ்பேசும் மக்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட் டார்கள்.

## ''தீண்டாமையை ஒழிக்க தீவிர செயல்திட்டம் வேண்டும்''

### என்கிறார் வி. என்

கொடிகாமம், ஞாயிறு

'சிறுபான்மையினரான நாம் எம்முள் மேலும் ஒருசிறு பான்மை இனத்தை வளர்க் கும் இந்நிலையை மாற்றி நாம் எல்லோரும் ஒருதாய் மக்கள் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். தீண்டாமையை எப்படி நாம் ஒழித்துக்கட்ட முடியும் என்ற திட்டம் தீட் டித் தீவிரசெயலில் இறங்க வேண்டும். தீண்டாமையை அகற்றுவதற்குப் பலாத்காரத் தைப் பிரயோகித்து ஒருபோ தும் வெற்றிகாண முடியாது. அன்புவழியில் சிறிதளவு சட் டத்தையும் பிரயோகித்துத் தீண்டாமையை அகற்றவேண் டும். இவற்றுள் அன்புவழி மூலம் தீர்க்கவேண்டும் என் பதே தமிழர் விடுதலைக் கூட் டணியின் கொள்கையாகும்'.

இவ்வாறு மட்டுவில் வடக் கில் ஐந்துசந்திக்கருகாமையில் திரு. சின்னத்தம்பி தலைமை யில் நடைபெற்ற தமிழர் விடு தலைக்கூட்டணி தேர்தல் பிர சாரக்கூட்டத்தில் சாவகச்சேரி வேட்பாளர் திரு. வ. ந. நவ ரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: மக்கள் மத்தியில் உள்ள பாகு பாடுகளை அகற்ற விரும்பியே தமிழரசுக்கட்சி முதலில் சம பந்தி போசனத்தை நடாத்தி யது. சிறுபான்மைத்தமிழரும் உயர்பதவி வகிக்கவேண்டும் என்பதற்காக, செனட்டர் பதவி ஒருசிறுபான்மைத் தமி ழருக்கு வழங்குவதற்குச் சிபார்சு செய்தோம். தமிழ் மாணவர் பேரவையின் தலைவ ராக இருக்கும் புஷ்பராசா ஒரு சிறுபான்மைத் தமிழரே' என் றார்.

'திரு. விநாயகமூர்த்தி பேசு கையில், பொதுத்தேர்தல் வந் ததும் திரு. ஜி. ஜி. பொன் னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்தாரா இல்லையா என்ற சர்ச்சை கிளப்புகின்றவர்கள், அவர்

(5ம் பக்கம் பார்க்க)

**வின்ஸர்** சிவராம், கீதாஞ்சலி,
(யாழ்ப்பாணம்) தர்மலிங்கம், ஸ்ரீதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
**காத்திருப்பேன் உனக்காக**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
**ROBINSON CRUSOE**
(Family Entertainment) (Scope-color)
1-30 p. m. Special show for Schools

**மனோகரா** அசோகன்-சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நடித்த
**மணப்பந்தல்**
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர். நடித்த
**உழைக்கும் கரங்கள்**

**REGAL** Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
JEAN RICHARD in
**The Age of Gallantry**
(Action Color)

**சாந்தி** யாழ். நகர்
போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
★ சிவாஜி ★ சரோஜாதேவி
எம். ஆர். ராதா ரங்கராவ்
கலைஞர் மு. கருணாநிதியின்
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)

**ராஜா** 58-வது தினம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
**திருவருள்**
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

61-வது நாள்
**ராணி** எம். ஜி. ஆர். — லதா
(யாழ்ப்பாணம்) (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நாளை நமதே**
(ஈஸ்ட்டன் கலர்)

**ஸ்ரீதர்** சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** ஜெமினி — சாவித்திரி
(யாழ். நகர்) நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
**கடன் வாங்கிக் கல்யாணம்**
5-7-77 முதல் **தேன்நிலவு**

**லிடோ** போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்.நகர்) ஜெய்சங்கர்
(புதிய பிரதி) நடித்த
**வல்லவன் ஒருவன்**


# "முழுநேரத் தலைவர்கள் தமிழினத்திற்கு தேவை"

—சதாநடராசா

மட்டுவில், ஞாயிறு

'அன்றைய நமது தமிழ்த் தலைவர்கள் திர்க்கதரிசிகளாக இருந்திருந்தால் நாம் இன்று இத்தனை இன்னல்களுக்குள்ளாகவேண்டிய அவசியம் இருந்திருக்கமுடியாது'

தமிழ்ஈழ அரசுக் கழகத்தலைவர் திரு சதா. நடராஜா, மீசாலையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினர்.

ஆசிரியர் இ. வேலுப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. நடராஜா தொடர்ந்து கூறியதாவது:

1619ம் ஆண்டில் நாம் நமது தமிழ் ராஜ்சியங்களை இழந்தோம். அதன்பின் 1948ல் எமக்கு சுதந்திரம் கிடைத்தது. அன்றிருந்த நம் தலைவர்கள். சுதந்திரத்தைப் பெறும்போது அவரவர் பங்கை, அன்று கொடுத்த அதேநிலையில் பெற்றிருந்தால் இன்று இந்தநிலை வந்திருக்கமுடியாது.

நமது மத்தியிலே இன்று மக்களுக்கு சுதந்திரதாகம் ஏற்பட்டுள்ளது உண்மை. ஒரு மக்கள் இயக்கமாக, மக்கள் பூரண உணர்ச்சியுடன் பங்கெடுத்து உழைக்கக்கூடிய இயக்கமாக மாற்றியமைக்கப்படவேண்டும் ஆனல் அதற்கு எமது தலைவர்கள் தமது நேரத்தை, தொண்டை முழுக்க முழுக்க மக்கள் சேவைக்காகப் பயன்படுத்தவேண்டும். அந்தநிலை உருவாகவேண்டும். அதற்காகவே என்னை நான் அர்ப்பணித்துள்ளேன்'

இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். குருசாமி உட்பட பலர் பேசினர்.

## அதிசிறப்பு வகுப்பு பரீட்சை

கொழும்பு, ஞாயிறு

இவ்வருடம் ஆகஸ்ட் 19, 20ம் திகதிகளில் நடைபெறவிருந்த பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்கான போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு அறிவித்துள்ளது. இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதியும் பரீட்சை நடைபெறும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-இ)

## தீண்டாமை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியை ஆதரிக்கவில்லை என்று துண்டுப்பிரசுரம் வெளியிடுபவர்கள் ஜி. ஜி. எந்தக் கட்டத்தில் தமிழர் கூட்டணியுடன் சேரவிரும்பவில்லைஎன்று அறிக்கை விடுவார்களா என்றும் கேட்டார்.

திருவாளர்கள் அண்ணாதாசன், கரிகாலன், பாலசுப்பிரமணியம், கணேசலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## முஸ்லிம்—

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

யாது. நாடு பிரிந்தேதீரும்'' என்றார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. மு சிவசிதம்பரம், தொழிலதிபர் திரு. எஸ். தியாகரராசா, திரு. யேசுதாஸன், ஜனாப் சகாப்தீன் உட்படப் பலர் உரையாற்றினர்கள். (கெ-அ)


3-வது வாரம்
**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
நடித்த
**தங்கப்பதக்கம்**

கடைசி வாரம்
**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - சுஜாதா
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கமலஹாசன்—தீபா
**அந்தரங்கம்**


## விளம்பரம்

### பனங்காமம் கிராமாட்சி மன்றம் வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1977—1978

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இம்மன்றத்தோடு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள் ஒப்பந்தக்காரர்கள் உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கொண்டுள்ள காகித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1977' எனக் குறிப்பிட்டு 1977-7-31-ந் திகதியன்றோ அதற்கு முன்னரகவோ இதன் கீழ்க்கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கக்கூடியதாகப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

#### விடயங்கள்

1. எழுது கருவி வகை
2. அலுவலக உபகரணங்கள்.
3. தளபாடங்கள்.
4. களஞ்சியப் பொருட்கள் முதலியன

#### சேவைகள்

1. கட்டடங்களைப் பழுது பார்த்தலும், பேணலும்.
2. தளபாடம், அலுவலக உபகரணங்கள் முதலியன பழுது பார்த்தலும்.
3. 5,000-00 ரூபாவிற்கு மேற்படாத சிறிய வேலைகள் செய்தல் (கிராமசபைப் பொது நிதி வேலைகள்)
4. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்தே வழக்கமாகக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும், அவசியமாகக்காணும் பட்சத்தில் வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்யும் உரிமை மன்றத்திற்கு உண்டு. வேண்டப்படும் பொழுது விலைகளைச் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவு ஆணை விடுக்கப்படும் போது உரிய காலத்தில் வழங்கத் தவறும் அலலது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுக்களுக்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதனவாகவிருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தலில்லாது பதிவேட்டிலிருந்து நீக்கஞ்செய்யப்படும்.

S. ஸ்ரீகந்தராசா,
விசேட ஆணையாளர்,
பனங்காமம் கிராமாட்சி மன்றம்.

பனங்காமம் கிராமாட்சி
மன்றப் பணிமனை,
பாண்டியன்குளம்,
வவனிக்குளம்,
4-7-77. 6576

## வரி விளம்பரம்

### தேவை

குடியிருப்பதற்கு சகல வசதிகளுடன் வீடு வளவு அல்லது வீடு கட்டக்கூடிய காணி 5-8 பரப்பு வரை தேவை. உரும்பராய், மருதனமடம் அல்லது உடுவில் எல்லைக்குள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். பொ. சிறீநடராஜ், சீடில்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6575

### தவறிவிட்டது

2-7-77 காலை மெயில்புகைவண்டியில், இணுவிலுக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் எனது தெளிகருவி (எரிபொருளில் இயங்கும்) உப உறுப்புகளாகிய பிஸ்ரன், றிங்ஸ் (Piston & Rings) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆ. பாலசிங்கம் கேசன், உரும்பராய் வடக்கு, உரும்பராய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6580

## சிறைஉடைப்பு முயற்சி:

### தனிநபர் கமிஷன் விசாரிக்கும்

கொழும்பு, ஞாயிறு

வெலிக்கடை மகஸின் சிறைச்சாலையில் சிறை உடைப்பு முயற்சிகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தனிநபர் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது.

நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. வித்தசிங்க இந்த விசாரணையை நடாத்துவர். (ம-இ)

## அ.எ.வி.சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அஞ்சல் எழுது வினைஞர் சங்க யாழ்ப்பாணக்கிளை உறுப்பினர்களாக, மேற்படி கிளைச் சங்க 5-வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்; திரு.க. தருமலிங்கம், செயலாளரும் பொருளாளரும்; திரு. இ.மனோரஞ்சிதம், ஆட்சிக்குழு உறுப்பினர்; திருவாளர்கள் வே.குமரகுரு, அ. தில்லைநடராசா, வி.பிலிப். (கூ-அ)

## மல்லாகம் கிராமசபை உபதலைவர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

மல்லாகம் கிராமசபையின் உபதலைவராக 16-ம் வட்டார அங்கத்தவர் திரு. வே. செல்லத்துரை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மக்கள் நலன்கருதி பொது சேவைகளில் ஈடுபட்டு முன்னின்று உழைப்பவர்களைப் பாராட்டுவதன்மூலம் அவர்களின்சேவை ஊக்கமுடன் தொடர்ந்து நடைபெற வழி ஏற்படுகின்றது. எமது கிராம சபையில் சிறுபான்மைத் தமிழர்கள் இருவர் மட்டுமே அங்கத்தவராக இருக்கின்றபோதிலும் சிறந்த சேவைகாரணமாக திரு. வே. செல்லத்துத்துரை சகலஉறுப்பினர்களாலும்மதிக்கப்பட்டு உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று திரு. வே. செல்லத்துரைக்கு மல்லாகம் சன்மார்க்க சனசமூக நிலையத்தினரால் அளிக்கப்பட்ட பொதுவரவேற்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி பொன்னம்பலம் குறிப்பிட்டார். சன்மார்க்க சனசமூகநிலையத் தலைவர் திரு. ஐ. தம்பிமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மல்லாகம் கிராமசபை பிரதம லிகிதர் திரு. அ. கணேசன் உட்படப் பலர் உரையாற்றினர்கள்- (அ)

ஈழநாடு

The EELANADU

# துரையப்பாவின் பாரியார் கடிதம்: ஏபிரகாம் விளக்கம்!

யாழ்ப்பாணம், திங்கள்

''அமரர் துரையப்பாவின் துணைவியார் எனக்கு மூன்று கடிதங்கள் எழுதியுள்ளார். அதில் ஒரு கடிதத்தில்; 'எனது கணவருக்குத் துரோகம் செய்தவர்களுக்கு ஆதரவு தேட ஒரு பொழுதும் வரமாட்டேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.''

புதிய சோனகத்தெருவில் ஜனாப் எம். எஸ் ஏ. காதர் தலைமையில் யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாமை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:-

'.காலஞ்சென்ற யாழ் மாநகர சபை முதல்வரும் எனது சகோதரருமான திரு. அல்பிரட் தங்கராசாவின் துணைவியார் எனக்கு எழுதிய மூன்று கடிதங்களில் முதல் கடிதத்தில்; ''தேர்தல் முடியும்வரையும் நான் யாழ்ப்பாணம் வரமாட்டேட''னென்றும், இரண்டாவது கடிதத்தில் ''திருமதி ஜி.ஜி. பொன்னம்பலம் எனது ஆதரவைக் கேட்டு எழுதியுள்ளார்'' என்றும், மூன்றாவது கடிதத்தில் எனதும் கணவரினதும் ஆதரவாளர்கள் எனக்குக் கடிதங்கள் எழுதியுள்ளனர். முக்கியமாக திருமதி ஜி. ஜி. பொன்னம்பலம் என்னை வந்து தங்களுக்கு ஆதரவு தரச்சொல்லி எழுதியுள்ளார். அவர்களுக்காக வரமாட்டேன்''என்று குறிப்பிட்டுள்ளார்.

''குமாருக்கு முன்னதாகவே யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட முன்வந்தவன் நான். கூட்டணி டிக்கட் கிடைக்குமென்று கடைசி வரை காத்திருந்து ஏமாற்றப்பட்ட பின்னர்தான் திரு. குமார் யாழ்ப்பாணத் தொகுதிக்கே வந்தார். திரு. மாட்டினைப் பொறுத்தவரை சென்ற முறை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அமரர் ஜி. ஜியைத் தோற்கடிப்பதற்காக தமிழரசுக் கட்சியினால் அழைத்து வரப்பட்ட அவர் இந்தமுறையும் உங்கள் முன் வந்து சுயேச்சையாக வாக்குக் கேட்கிறார். தமிழரசை விட்டு திரு. மாட்டின் சென்றுவிட்ட பின்பு தமிழரசார் இத்தொகுதிக்கு எந்தவித உதவியையும் செய்யவில்லை. சுகாதாரக் கேடான முறையில் வாழும் பொம்மைவெளி மக்களை நான் பதவியேற்று வந்து சுகாதார நிலையில் வாழ வைப்பேன். இந்தப் பகுதியில் ஒரு வைத்தியசாலையும் அமைத்துத் தருவேன்'' என்றார்.

திரு. எஸ். பாலசிங்கம் பேசுகையில், ''தெற்கே கதிர்காமமும் மேற்கே திருக்கேதீஸ்வரமும் உள்ள பகுதிகளெல்லாம் தான் வாழவேண்டுமென்று விரும்புகின்ற தமிழன் நாடு துண்டாடப்பட்டால் இந்தத் திருத்தலங்களை எப்படித் தரிசிப்பான்? பிரிவினையின்பின் தென்னிலங்கைத் தமிழர்களின் நிலை என்ன? தனிநாடு கேட்டு பேசினால்மட்டும் போதாது; விவேகமும் தேவையானது'' என்று கூறினார்.

திரு. எஸ். தங்கராசா பேசுகையில், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் சேவையா? அல்லது சொல்லளவிலான போலிக்கோஷங்களா தேவை? மட்டக்களப்பிலே முஸ்லிம் ஒருவருக்கு இடமளிக்கக்கூடியதான நிலை இருந்தபோதும் இரண்டு தமிழர்களை அங்கே கூட்டணியினர் நிறுத்தியுள்ளனர் இந்த நிலையில் எந்த விதத்தில் முஸ்லீம்களின் வாக்குகளைக் கூட்டணியினர் கேட்கின்றனர். துரையப்பாவுக்கு அஞ்சலி செலுத்த இந்நாட்டின் பிரதமரே வந்திருக்கின்றார்' இப்பொழுது அமரர் துரையப்பாவின் பயரைச் சொல்லி வாக்குக் கேட்கின்ற குமார் பொன்னம்பலம், அவருக்கு இறுதிஅஞ்சலி செலுத்தக்கூட வராதவர் அவர் எப்படிதுரையப்பாவைச் சொல்லி வாக்கு கேட்கலாம்?'' என்று கேட்டார்.

ஜனாப்கள், எம். யூ: ஏ. கையூம், எம். எஸ், மீரான் சாகிப், எஸ். றபீக், எஸ். எம். எஸ். ஏ. காதர், எம். ரி. சுபைர், எம். எம். இஸ்மாயில் ஆகியோரும் உரையாற்றினர். (கூ)

## ''இவர்கள் வெளியேறினல் நானும் தயார்''

### அமைச்சர் சூரியர்

கிளிநொச்சி, ஞாயிறு

தபால் தந்தி தொடர்புகள், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், இங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் தனித்தமிழ் நாடு பற்றிப் பேசி, அதுசம்பந்தமாக ஒரு சவாலையும்விடுத்தார்!

இங்குள்ள சந்தை மைதானத்தில், அமைச்சர் செ. குமாரசூரியரை ஆதரித்துதேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசுகையில்தான் அமைச்சர், தனிநாடு சம்பந்தமான சவாலை விடுத்தார்! அக்கூட்டத்தில் அமைச்சர் தனது பேச்சின் ஒரு கட்டத்தில் கூறியதாவது: ''இன்று வடமாகாணத்தில் போட்டியிடும் தமிழர் கூட்டணி வேட்பாளர்களுக்கு எதிராகப் பல சுயேச்சைவாதிகள் போட்டியிடுகின்றனர். இவர்கள் எல்லோரும் கூட்டணியின் கொள்கையை ஏற்றுக்கொண்டு, ஒற்றுமையாக, இப்பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் ராஜினமா செய்வார்களேயானல், நானும் போட்டியிலிருந்து வாபஸ்பெற்று இவர்களுடன் தனித்தமிழ் நாடுகாண முன்வருவேன்''

கொழும்பு, ஞாயிறு

கொழும்புத் திட்டத்தின் கீழ்76-77ம் ஆண்டில் 106 புலமைப் பரிசில்களை பிரிட்டன் இலங்கையருக்கு வழங்கியுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெல்லோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaada P. O. Box 49, Jaffna. Telegram Eelanaada Telephone 389 Registered as News paper in Sri Lanka.

## மின்சார கழுத்துமாலை!

யாழ்ப்பாணம், திங்கள்

பூமாலைகள், கடதாசிமாலைகள், பிளாஸ்டிக் மாலைகள், காசுமாலைகள் பல சந்தர்ப்பங்களில் பல இடங்களில் பயன்படுத்தப் படுவதுண்டு தேர்தல் காலத்தில் இவை சர்வசாதாரணம். மின்பல்புகள் பூட்டப்பட்டு நூர்ந்து நூர்ந்து எரியும் மின்சாரக் கழுத்துமாலை இப்போது முதல் தடவையாகப் பாவனைக்கு வந்திருக்கிறது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் குருநகரில் யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் திரு. யோகேஸ்வரன் மேடையில் ஏறியதும் ஓர் ஆதரவாளர் இந்த மின்சாரக் கழுத்துமாலையைச் சூட்டினர் அது அவாது தேர்தல் சின்னம் உதயசூரியன்போன்று சிவப்புவெளிச்சத்தை நூர்ந்து நூர்ந்து காட்டிக்கொண்டிருந்தது.

இந்த மாலையை அவர் பூமாலைகள்போல் கழற்றி வைக்கவும் முடியவில்லை. மற்றும் ஆதரவாளர்கள் அவர் கழுத்தை நிறைக்கும்வண்ணம் வேறுமாலைகளைச் சூட்டவும் முடியவில்லை. வழமையாகத் தேர்தல் கூட்டங்களில் நடப்பதுபோல் போட்டுக் கழற்றிய மாலைகளை மீண்டும் மீண்டும் சூட்டும் நிலைமையும் ஏற்பட இடமில்லாது போய்விட்டது.

## இயக்கத்துக்காக-

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்ப்பமாகவே அமைகிறது. நான் ஒரு அரசியல் கட்சியின் சார்பில் இங்கு போட்டியிடவில்லை, சுதந்திரவேட்கை கொண்டதொரு இயக்கத்தின் சார்பில்போட்டியிடுகின்றேன்.

மகளிர் பேரவையைச் சேர்ந்த ஸ்ரீரஞ்சினி பேசுகையில் இந்தநாட்டில் இருபெரும் இனங்களாக சிங்கள-தமிழ் இனங்கள் வாழ்ந்துவந்தாலும் புதிய அரசியல் சட்டத்தின் மூலம் தமிழினத்தின் உரிமைகள் பறிக்கப்பட்டு அந்த இனம் இந்த நாட்டின் அடிமை இனமாகக்கப்பட்டுள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் சட்டத்தரணி கரிகாலன் செல்வி சித்திரா ஆகியோரும் மற்றும் பலரும் உரைநிகழ்த்தினர். [கா]

## சுயநிர்ணய...

(1-ம் பச்கத் தொடர்ச்சி)

ஆதரவையும்வழங்கவேண்டும்.

மகாநாட்டில் மீண்டும் புதிய தலைவராக திரு எச். என். பெர்னண்டோ தெரிவுசெய்யப்பட்டார்.

இம்மாநாட்டிற்கு தென்னிலங்கையிலிருந்து சுமார் 5000 ஆசிரியர்கள் வந்திருந்தனர். (க

## கூட்டணியினர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி கிடைத்தது.

'குமார் வென்று எந்தச் சிங்களக்கட்சியோடு சேரப்போகின்றார் என்று கேட்டுக்கொள்ளும் திரு. சிவசிதம்பரத்திற்கு வெற்றியை நிர்ணயித்ததற்காக எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

கூட்டணி நியமனம் எனக்குக் கிடைக்காததால்தான் நான் கூட்டணியைக் கேள்விகள் கேட்பதாக எனக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறார்கள். எனக்கு கூட்டணி நியமனம் தந்திருந்தாலும் நான் இந்தக் கேள்விகளுக்கான மறுமொழியை அவர்களிடம் கேட்காமல் கூட்டணி அபேட்சகளைப் போட்டியிட்டிருக்கமாட்டேன்' என்று கூறினர்,

ஜனாப் நூர்முகமது திருவாளர்கள் கே கதிர்காமநாதன், புலவர் ஜனாப் ஏ. எல். எம். லாசிம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (கூ)



மயிலர்: கட்டின வீடு அரைகுறையாக்கிடக்கு. காங்கேசன்துறையிலை ஆருப் தெரிஞ்சவை வேலை செய்கினமே ...அவசரத்துக்கு ஒரு பத்து பக்கற் சிமெந்து எடுக்கவேணும்......

வேலர்: நீ...சிமெந்தெண்டு சிவனே விடுருய்...... நான் விரதத்துக்கு வீடு மெழுக சாணி கிடைக்காமல் அலையிறன்...... இப்ப சாணிக்கு எல்லாத்திலும் பெரியதட்டுப் பாடு.

மணியம்: சாணிக்கு தட்டுப்பாடு வராமல் என்ன செய்யும்......சுவர் மதிலெல்லாம் உள்ள வேட்பாளரின் படங்களையெல்லாம் சாணியில் வட்டுறுப்பாக மெழுகித்தள்ளுறுங்கள்......

— சுந்தர்

## சட்டமோ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். மாநிலத்தில் மதுவிலக்கு திட்டம் தீவிரப் படுத்தப்படும்.'

மாநில நிலைமை குறித்து பிரதமர் திரு. மொராஜி தேசாயிடம் தமிழ்நாடு முதலவர் ஆலோசனை நடத்தினர்

### சட்டத்தினல் முடியாது

'இருமொழித் திட்டமே தொடர்ந்தும் அமுல் நடத்தப்படும். ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது அந்த மாநில மக்களின் விருப்பத்தைப் பொறுத்தது. சட்டத்தாலோ, பலவந்தத்தாலோ மொழியைத் திணித்துவிட முடியாது மக்களின் உள்ளத்து உணர்ச்சிக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். ஹிந்தி தமிழ்நாட்டில் திணிக்கப்பட மாட்டாது என பிரதமர் என்னிடம் உறுதியளித்துள்ளார். மொழிப்பிரச்னை காலப் போக்கினலும், மனமாற்றத்தினலும் தீர்ந்து விடக் கூடியது'. என்று திரு. எம். ஜி. ஆர். கூறினர்.

### ஜனதிபதி தெரிவு பற்றி...

ஜனதிபதி தெரிவு குறித்து அவரிடம் கேட்டப்பட்ட போது, 'ஆளும் கட்சி தமது வேட்பாளரைத்தேர்ந்தெடுத்த பின்னர் நாம் அநுபற்றி எம் நிலையை முடிவு செய்வோம்' என்ருர்.

'பிரதமருடன் நான் பேசிய போது ஜனதிபதி தெரிவு குறித்து எதுவும் பிரஸ்நாபிக்கப்படவில்லை.' என்றும் அவர் சொன்னர். (உ)

## இன்று

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறும் அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் சங்கம் சுயாட்சிக் கழகத்தை ஆதரிக்கக் கோரும் திருத்தப் பிரேரணை கொண்டுவரப் படவிருக்கிறது.

இக்கூட்டம் இன்று காலை யாழ் வை. எம். வி. ஏ. மண்டபத்தில் நடைபெறுகிறது. (அ)

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணார்பண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகாகணபதி கோவில் (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவில்) கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறுகின்றது காலை வித்துவான்கே. ஆர். நடராஜாவினது பண்ணிசை ஓதலும், சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ''வினை தீர்க்கும் விநாயகன்'' என்னும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும் (கெ)

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டிகளும் 67வது கல்லூரித் தினவிழாவும் இன்று நடைபெறுகின்றன. பிற்பகல் 2 - 30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. க. சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். 2-30 மணிக்கு அணிநடையுடனும் கொடிவணக்கத்துடனும் ஆரம்பமாகும் இவ் வைபவம் மாலை 5 -30 மணிக்கு பரிசளிப்பு விழாவுடன் முடிவடையும். (அ)

### அணிவகுப்பு

கொழும்பு, ஞாயிறு

காமணுற்போன ஜேர்மன் பேராசிரியர் விவகாரம்தொடர்பாகக் கைது செய்யப்பட்டகனில் என்பவர் மீது அடையாள அணிவகுப்பு நேற்று நடைபெற்றபோது எவரும் அடையாளம் காட்டவில்லை.

கொழும்பு பதில் மாஜிஸ்திரேட் திரு. டலுவத்த முன்னிலையில் நடைபெற்ற அணிவகுப்பை இன்ஸ்பெக்டர் திரு. எஸ். செல்லத்துரை நடத்தினர். (ம-இ)

## நரசிம்மன் காலமானர்

சென்னை, ஜூலை 3.

பிரபல இந்திய ஆங்கில தினசரியான ஹிந்து' பத்திரிகையின் நிர்வாகஆசிரியர்திரு. ஜி. நரசிம்மன் சென்னையில் இன்று மாரடைப்பால் காலமானர்.

1968-ம ஆண்டு இவருக்கு 'பத்மபூஷண்' பட்டம் கிடைத்தது. இறக்கும் போது இவருக்கு வயது 62.